RNI-NO: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
DAILY EVENING
மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 155 | ஜூன்.10, 2025 செவ்வாய்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# "தமிழகத்தில் பெண்களுக்கு எதிரான அசாதாரண சூழல்" : தினகரன் விமர்சனம்




சென்னை: ஜூன்.10-

"அரசு சேவை இல்லத்தில் தங்கி பயிலும் மாணவி ஒருவரே பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகும் அளவுக்கான அசாதாரண சூழல் தமிழகத்தில் உருவாகியுள்ளது," என்று அமமுக பொதுச் செயலாளர் டிடிவி தினகரன் கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "சென்னை தாம்பரத்தில் இயங்கி வரும் அரசு சேவை இல்லத்தில் தங்கி 8ம் வகுப்பு பயிலும் மாணவி ஒருவர் காவலாளியால் பாலியல் தொல்லைக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதாக வெளியாகியிருக்கும் செய்திகள் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்துகின்றன. பள்ளி, கல்லூரிகளில் தொடங்கி அனைத்து இடங்களிலும் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை பெண்களுக்கு எதிரான குற்றச் சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை கண்டும் காணாமல் கடந்து செல்லும் திமுக அரசால், அரசு சேவை இல்லத்தில் தங்கி பயிலும் மாணவி ஒருவரே பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகும் அளவுக்கான அசாதாரண சூழல் தமிழகத்தில் உருவாகியுள்ளது.

தமிழக அரசின் சமூக நலத்துறையின் கீழ் இயங்கி வரும் அரசு சேவை இல்லத்தின் பயிலும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டிய காவலாளியே, இத்தகைய கொடூரச் செயலில் ஈடுபட்டிருப்பது, அரசு சேவை இல்லத்தில் தங்கி பயிலும் ஒட்டுமொத்த மாணவிகளின் பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கும் வகையில் அமைந்திருக்கிறது. மேலும், பெண்களுக்கு எதிரான பாலியல் வன்கொடுமை சம்பவங்களில் ஈடுபடும் நபர்களுக்கான தண்டனையை கடுமையாக்கி சட்டம் இயற்றப்பட்ட பின்னரும், இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவது திமுக அரசின் மீதும் அதன் காவல்துறை மீதும் குற்றவாளிகளுக்கு சிறிதளவும் பயமில்லை என்பதையே வெளிச்சம் போட்டு காட்டுகிறது.

எனவே, அரசு சேவை இல்லத்தில் மாணவியை பாலியல் தொல்லைக்கு உள்ளாக்கிய வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள காவலாளி மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதோடு, பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கித் தருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தமிழக அரசை வலியுறுத்துகிறேன்," என்று அவர் கூறியுள்ளார்.

# தவெக கொள்கை பரப்புச் செயலாளராக முன்னாள் ஐஆர்எஸ் அருண்ராஜ் நியமனம் : விஜய் அறிவிப்பு





சென்னை: ஜூன்.10-

தவெக தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கை பரப்பு மற்றும் செயல்திட்டங்களை மேம்படுத்தும் வகையில் டாக்டர் K.G. அருண்ராஜ் Ex IRS கொள்கை பரப்புப் பொதுச் செயலாளர் (Propagada & Policy General Secretary) பொறுப்பில் நியமிக்கப்படுகிறார்.

இவர், எனது உத்தரவு மற்றும் ஆலோசனைக்கு இணங்க, கழகப் பொதுச் செயலாளர் என்.ஆனந்த் அவர்களது வழிகாட்டுதலின்படி கழகக் கொள்கைகள் மற்றும் கொள்கை சார்ந்த செயல்திட்டப் பணிகளை மேற்கொள்வார். கழகத் தோழர்களும் அனைத்து நிலை நிர்வாகிகளும் புதிய பொறுப்பாளருக்கு முழு ஒத்துழைப்பை நல்கி வரும் சட்டமன்றத் தேர்தலுக்கான கட்டமைப்பு மற்றும் தேர்தல் முன்னெடுப்புகளை முழுவீச்சில் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

மேலும், "அதிமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.ராஜலட்சுமி, திமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டேவிட் செல்வின், அதிமுக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஸ்ரீதரன், ஜேப்பியார் ரெமிபாய் கல்வி அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் டாக்டர் மரிய வில்சன், முன்னாள் நீதிபதி சுபாஷ் ஆகியோர் அண்மையில் தவெகவில் இணைந்துள்ளனர். அவர்களுக்கு நிர்வாகிகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்" என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



■ மதுரை மாவட்டம் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம் கச்சிராயன்பட்டி ஊராட்சி, வஞ்சிநகரம் ஊராட்சி மற்றும் கம்பூர் ஊராட்சியில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி , தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

# நுகர்வோர் பாதுகாப்பு கவுன்சிலுக்கு 23 பேர் கொண்ட புதிய குழு அமைப்பு




சென்னை: ஜூன்.10-

உணவுத்துறை அமைச்சர் தலைமையிலான மாநில நுகர்வோர் பாதுகாப்பு கவுன்சிலை சீரமைத்து 23 உறுப்பினர்களுடனான புதிய பட்டியலை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து தமிழக அரசிதழில் உணவுத்துறை செயலர் சத்யபிரத சாஹூ வெளியிட்டுள்ள அறிவிக்கையில் கூறியிருப்பதாவது: உணவுத்துறை அமைச்சர் தலைமையிலான இந்த கவுன்சிலில், வேலூர் எம்.பி. கதிர்ஆனந்த், தஞ்சாவூர் எம்.பி., எஸ்.முரசொலி, தாம்பரம் எம்எல்ஏ எஸ்.ஆர்.ராஜா, விக்கிரவாண்டி எம்எல்ஏ அன்னியூர் சிவா, உணவுப் பொருள் வழங்கல் ஆணையர், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணைய பதிவாளர், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழக தலைவர், இந்தியன் ஆயில் நிறுவன மாநில ஒருங்கிணைப்பாளர், மாநில அளவிலான வங்கியாளர் குழுவின் உதவி பொதுமேலாளர், பிஐஎஸ் தென் மண்டல துணை இயக்குநர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தவிர தமிழ்நாடு உணவு பாதுகாப்பு ஆணையர், ஈரோடு நுகர்வோர் பாதுகாப்பு மைய தலைவர், கன்னியாகுமரி மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு சங்க தலைவர், சென்னை அம்பத்தூர் இந்திய நுகர்வோர் விழிப்புணர்வு சங்க தலைவர், ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் உள்ள நுகர்வோர் ஆராய்ச்சி கல்வி அமைப்பின் தலைவர், விழுப்புரம் மாவட்டம் நுகர்வோர் பாதுகாப்பு நலச்சங்க தலைவர், காவிரி டெல்டா விவசாயிகள் குழுவின் வி.சத்தியநாராயணன், மெட்ராஸ் சேம்பர் ஆப் காமர்ஸ் தலைவர், தமிழ்நாடு ஓட்டல்கள் சங்க தலைவர், சிஐஜி அமைப்பின் தலைவர், எத்திராஜ் மகளிர் கல்லூரியின் முதல்வர் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். உணவுத்துறையின் செயலர் உறுப்பினர் செயலராக இருப்பார். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "தேர்தல் வாக்குறுதிகள்... நான் விவாதத்துக்கு வரத் தயார்" : அமித் ஷாவுக்கு ஆ.ராசா பதில்





சென்னை: ஜூன்.10-

"திமுகவின் தேர்தல் அறிக்கை வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றிவிட்டோம். அரசு ஊழியர்களுக்கான வாக்குறுதி மட்டும் நிலுவையில் உள்ளது. ஆனால், அதற்கும் ஒரு குழு அமைத்துள்ளார் முதல்வர். வாக்குறுதிகளில் சொல்லாத பலவற்றை இந்த அரசு செய்துள்ளது. எங்கு விவாதத்தை வைத்தாலும் நான் வரத் தயார். ஆனால். இந்தியில் மட்டும் பேசக்கூடாது" என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு திமுக எம்.பி ஆ.ராசா பதிலளித்துள்ளார்.

சென்னையில் திமுக துணைப் பொதுச் செயலாளரும், எம்.பியுமான ஆ.ராசா இன்று (ஜூன் 9) செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியது: "நேற்றைய தினம் மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மதுரையில் பேசிய பேச்சு அப்பட்டமான பொய் , அருவருப்பான வஞ்சகம் , பிளவு நோக்கம் கொண்ட சூதுரை. இந்த மூன்றையும் தவிர அவரின் பேச்சில் என்னால் எதுவும் கண்டுபிடிக்க முடியவில்லை. நாட்டின் உள்துறை அமைச்சர் ஒரு மாநிலத்துக்கு வரும் போது, அவருக்கு இருக்கும் தகுதி, பொறுப்பு, கடமை உணர்ச்சி ஆகியவற்றை கிஞ்சிற்றும் கவலைகொள்ளாமல், அவதூறுகளை அள்ளி வீசியுள்ளார்.

மாற்றுக் கட்சி ஆட்சி அந்த மாநிலத்தில் நடந்தால், ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளை சொல்வதும், மதவாத பிளவை வேண்டுமென்றே உருவாக்கி, அமைதியாக இருக்கும் மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சினையை ஏற்படுத்தி, கலவரத்தை தூண்டி, அதன் மூலம் அரசியல் ஆதாயத்தை பெறமுடியுமா என்ற அருவருப்பான உணர்ச்சிதான் அவருடைய பேச்சில் வெளிபட்டுள்ளது. இது கூட்டாட்சி தத்துவத்துக்கு அழகல்ல.

மாநில மத்திய அரசுக்கு இடையே இருக்கும் சுமுக உறவுக்கு குந்தகம் விளைவிக்கும் பேச்சை அவர் பேசியுள்ளார். அவர் பேச்சை ஒவ்வொரு வரியாக ஆதாரத்தோடு எங்களால் பொய் என நிரூபிக்க முடியும். தமிழ்நாடு அமைதிப் பூங்காவாக இருப்பதை பாஜக விரும்பாமல், அரசியலுக்காக மிகவும் கீழ்த்தரமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள அமித் ஷாவின் பேச்சை போக்கை ஒருபோதும் தமிழக மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்.

தமிழக முதல்வர் தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கு அமைதி, வளர்ச்சி திட்டங்கள், மத்திய அரசின் நிதி பல நேரங்களில் கிடைக்காவிட்டாலும் மாநில அரசின் நிதியை கொடுத்து வளர்ச்சி திட்டப்பணிகள் தடைபடாமல் விரைவாக வழங்கி நடைமுறைப்படுத்துவதைப் பொறுத்துக்கொள்ள முடியாத மத்திய அரசும், பாஜகவும், அமித் ஷாவை வரவைத்து இப்படி ஒரு கேலிக்கூத்தான, அருவருப்பான அரசியல் நாகரிகத்துக்கு புறம்பான காரியத்தை அரங்கேற்றியுள்ளார்கள். அமித் ஷா என்ற தனிநபருக்கு மட்டும் அல்ல , அவர் வகிக்கும் பதவிக்கும் இது அழகல்ல. இந்த அரசியல் சித்து விளையாட்டுகளை அவர் இத்துடன் நிறுத்திக்கொள்வது நல்லது," என்றார்.

அப்போது பாஜக அரசு அதிகமாக நிதி ஒதுக்கிருப்பது குறித்த கேள்விக்கு பதிலளித்த அவர், "மன்மோகன் சிங் ஆட்சிக் காலத்தில் நேரடி நிதி வருவாய் எவ்வளவு? தற்போது எவ்வளவு? நான்கு மடங்கு நேரடி நிதி வருவாய் உயர்ந்துள்ளது. மன்மோகன் சிங் ஆட்சிக்காலத்துடன் ஒப்பிட்டால் தமிழ்நாட்டிற்கு பாஜக கொடுக்கும் நிதி மிக குறைவாகவே உள்ளது," என்றார்.

உள்துறை அமைச்சர் அமித் ஷாவின் வருகை திமுகவுக்கு ஷாக் அடிகிறதா என்கிற கேள்விக்கு, "அமித் ஷாவை பார்த்து திமுகவுக்கு எதற்கு ஷாக் அடிக்க வேண்டும்? திமுகவை பார்த்து பாஜகவுக்கு ஷாக் அடித்த காரணத்தால்தான் உள்துறை அமைச்சரே வந்துள்ளார். பாஜகவின் எந்த மாதிரியான பிளவுவாதமும், மத அரசியலும் தமிழ்நாட்டில் எடுபடவில்லை.

எல்லா தேர்தல்களிலும் மக்கள் திமுகவின் பின்னால் நிற்கிறார்கள். இதை புரிந்துகொள்ள முடியாமல், ஜீரணித்துக்கொள்ள முடியாமல் இவர்கள் பேசுவதை பார்த்து எங்களுக்கு எதற்கு பயம்? இவர்களைப் பார்த்து சிரிப்புதான் வருகிறது. கடந்த நாடாளுமன்ற தேர்தலுக்கு 5 முறை நாட்டின் பிரதமர் தமிழ்நாடு வந்தார். அவரின் வருகையே சொல்லும் யாருக்கு பயம் என்பதை," என்றார்.

அப்போது திமுகவின் தேர்தல் வாக்குறுதிகள் குறித்து கேட்கப்பட்டது. அதற்கு பதிலளித்த அவர், "திமுகவின் தேர்தல் அறிக்கை வாக்குறுதிகளில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றிவிட்டோம். அரசு ஊழியர்களுக்கான வாக்குறுதி மட்டும் நிலுவையில் உள்ளது. ஆனால் அதற்கும் ஒரு குழு அமைத்துள்ளார் முதல்வர். வாக்குறுதிகளில் சொல்லாத பலவற்றை இந்த அரசு செய்துள்ளது. எங்கு விவாதத்தை வைத்தாலும் நான் வரத் தயார். ஆனால் இந்தியில் மட்டும் பேசக்கூடாது. மத்திய நிதி ஒதுக்க வேண்டிய எய்ம்ஸுக்காக இன்னமும் மாநில அரசு காத்துக்கொண்டுள்ளது.

அமித் ஷா, மோடி ஆகியோரை பார்த்து எல்லாம் எங்களுக்கு எந்த பயமும் இல்லை. அவர்களுக்கு பின்னால் ஒரு சித்தாந்தம் ஒளிந்துகொண்டு மற்ற இடங்களில் வெற்றி பெறுகிறது. ஆனால் இங்கு அதனால் வெற்றி பெற முடியாததற்கு காரணம் எங்களிடம் அதற்கான மாற்று சித்தாந்தம் உள்ளது. திராவிட இயக்க சித்தாந்தம் இருக்கும் வரை அவர்களால் இங்கு ஆட்சிக்கு வர முடியாது. நாங்கள் டெல்லியோ, ஹரியானாவோ, மகாராஷ்டிராவோ அல்ல, நாங்கள் தமிழ்நாடு," என்றார்.

தொகுதி மறுசீரமைப்பு பற்றி அமித் ஷா ஏன் பேச மறுக்கிறார் என்ற கேள்விக்கு, "எந்த அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பு வர போகிறது என திமுக தொடர்ந்து கேள்வி எழுப்பினாலும் எந்த பதிலும் பாஜகவிடம் இல்லை. 800க்கும் அதிகமான இருக்கைகளை வைத்து புதிய நாடாளுமன்ற கட்டிடத்தைக் கட்ட என்ன அவசியம்? மக்கள் தொகை அடிப்படையில் தொகுதி மறுசீரமைப்பைச் செய்தால் கொண்டு வந்தால் தென் இந்தியா முற்றிலும் பாதிக்கப்படும். தென் இந்திய மாநிலங்களின் துணை இல்லாமலே எந்த ஒரு மசோதாவையும் அவர்களால் நிறைவேற்ற முடியும் என்பதுதான் அதற்குள் இருக்கும் சூது. இதை முறியடித்த ஒரே தலைவர் முதல்வர் ஸ்டாலின்தான். அதை டெல்லி வரை அனைவரும் ஒப்புக்கொண்டுள்ளனர்," என்றார்.

மதுரையில் நடைபெறவுள்ள முருகன் மாநாடு குறித்த கேள்விக்கு, "அரசியல் ஆதாயத்துக்காக மட்டுமே மதுரையில் முருகன் மாநாட்டை நடத்துகின்றனர். இந்து சமய அறநிலையத் துறை சார்பாக நடத்தப்பட்ட மாநாட்டை போல் அல்லாமல், இவர்கள் மதவாதத்தைத் தூண்டி விட்டு, அதன் மூலம் சிறுபான்மையினருக்கு எதிராக அரசியல் செய்து ஆதாயம் தேட முயற்சிப்பதை மதுரை மக்களே விரும்பவில்லை. தமிழைப் பற்றி இவ்வளவு பேசும் அமித் ஷா, கீழடி ஆய்வையும், இரும்பு பயன்பாட்டின் அறிக்கையையும் மத்திய அரசு திரும்ப திரும்ப ஏன் நிராகரிக்கிறது என தெரியவில்லை.

தமிழுக்கும், தமிழர்களுக்கும், தமிழ்நாட்டிற்கும், திராவிடத்திற்கும் எதிரான மனநிலையை அவர்களே வெளிக்காட்டிக் கொள்கிறார்கள். அதற்கான தண்டனையை 2026 தேர்தலில் நிச்சயம் பாஜக அறுவடை செய்யும். இவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு வட இந்திய மொழிகளின் நிலைமை என்ன என்பதை யோசிக்க வேண்டும். இந்தியைக் கொண்டு வந்தவர்கள், அடுத்ததாக சமஸ்கிருதம் மொழியை கொண்டு வருவார்கள்," என்றார்.

மோடி, அமித் ஷா வருகை திமுகவின் வெற்றியையே உறுதி செய்யுமா என்ற கேள்விக்கு, "எத்தனை முறை மோடி தமிழகம் வந்தாரோ அத்தனை வாக்கு வித்தியாசம் நாடாளுமன்ற தேர்தலில் திமுகவுக்கு கிடைத்தது. தற்போது எத்தனை முறை அமித் ஷா தமிழகம் வருகிறாரோ அத்தனை வெற்றி தொகுதிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கும். தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கை பற்றி பேச பாஜகவுக்கு எந்த தகுதியும் இல்லை. பில்கிஸ் பானு, மணிப்பூர் போன்றவற்றை பார்த்து மவுனமாக இருந்தார்கள்.

ஒரே இந்தியா, ஒரே தேசம் என்று சொன்னால், ஒடிசாவில் போய், ஒரு தமிழர் உங்களை ஆளலாமா என்று கேட்டவர் எப்படி ஒரே இந்திய ஒரே தேசம் என கூறமுடியும். பாஜகவினர் கூறுவது அனைத்தும் பொய். ஆர்எஸ்எஸ்ஸின் இலக்குக்கு மோடியும் அமித் ஷாவும் பகடைக்காய்," என்றார்.

கூட்டணி ஆட்சி என்று அமித் ஷா பேசியது குறித்த கேள்விக்கு, "கூட்டணி ஆட்சிதான் அமையும் என அமித் ஷா கூறியது குறித்து மீண்டும் எடப்பாடி பழனிசாமி தான் தெளிவுபடுத்த வேண்டும். எப்படிப்பட்ட கூட்டணி அமைந்தாலும் அதை எதிர்கொள்ளும் திறன் எங்கள் முதலமைச்சருக்கு உண்டு," என்று அவர் கூறினார்.

# வேலூர் மாவட்டத்தில் கடந்த மூன்றாண்டுகளில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் 63,739 மாணவ மாணவியர்கள் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை பெற்று, 1,923 நபர்கள் வேலை வாய்ப்பினை பெற்றுள்ளனர் என மாவட்ட ஆட்சியர் வே.இரா சுப்புலெட்சுமி தெரிவித்துள்ளார்

வேலூர் மாவட்டம் நான் முதல்வன் திட்டத்தில் திறன் பயிற்சிகளை பெற்று வேலை வாய்ப்பினை பெற்றுள்ள மாணவ, மாணவிகள் வேலை வாய்ப்பினை பெற்றதன் மூலமாக தங்கள்மனம் நிறைந்துள்ளதாகவும், இத்திட்டத்தை கொண்டு வந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்துள்ளனர். தமிழ்நாட்டில் இளைஞர்களின் வேலைவாய்ப்புக்கென தொழில்துறையின் தேவை சார்ந்த திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்க நான் முதல்வன் எனும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் தொடங்கி வைத்தார். இத்திட்டத்தின் மூலம் கல்லூரி பாடத்திட்டத்தில் வழங்கப்படும் வழக்கமானபாடப்பிரிவுகளுடன் மாறிவரும் தொழில்நுட்ப உலகிற்கு ஏற்ப திறன் படிப்புகளும் இணைந்து வழங்கப்படுகிறது.

பல்வேறு படிப்புகள் பற்றிய அவ்வப்போதைய சமீபத்திய தகவல்களையும், தொழில் துறைகளுக்குத் தேவையான குறிப்பிட்ட திறன்கள் தொடர்பான தகவல்கள் குறித்தும், கல்லூரி மாணவர்கள் தெரிந்து கொள்ளும் வகையில் அனைத்து விவரங்களையும் வழங்குவதே நான் முதல்வன் தளத்தின் நோக்கமாகும். இது தமிழ்நாட்டில் உள்ளமாணவர்கள் தங்களுடைய வாழ்க்கை இலட்சியங்களை அடையும் வகையில், தங்களுக்கு விருப்பமான துறையில் பயிற்சி பெற உதவுகிறது தொழில் துறையில் தற்போதுள்ள பணியிட இடைவெளிகளைநிரப்பக்கூடிய திறன் கொண்டவர்களாக மாணவர்களை உருவாக்கும் வகையில் பல்வேறு திறன் பயிற்சிகளை அவர்களுக்கு அளிப்பதற்கான ஆற்றல்மிகு பயிற்றுனர்களை அடையாளம் காண்பதும் இத்திட்டத்தின் குறிக்கோளாகும். நான் முதல்வன் மாநிலம் முழுவதும் உள்ள 18 முதல் 35 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு பல்வேறு மாநிலம் மற்றும் மத்திய அரசின் உதவி திட்டங்களின் கீழ் இலவச வேலை வாய்ப்புடன் தொடர்புடைய திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குகிறது. தேசிய அளவில் சான்றளிக் கப்பட்ட இந்த பயிற்சி வகுப்புகள் பதிவு செய்யப்பட்ட பயிற்சி நிறுவனங்கள் மூலம் சுகாதாரம், ஊடகம், பொழுதுபோக்கு. பசுமை சார்பணிக, சில்லறை வணிகம், அழகு கலை, கட்டுமானம், மின்னணுவியல், வன்பொருள். உணவு பதப்படுத்துதல், தோல். சரக்கு போக்குவரத்து, தகவல் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த

சேவைகள் போன்ற 20க்கும் மேற்பட்ட வெவ்வேறு துறைகளில் மாநிலம் முழுவதும் உள்ள நகர்ப்புற மற்றும் கிராமப் புறங்களில் உள்ள மையங்களில் நடத்தப்படு கின்றன. நான் முதல்வன் திட்டத்தின் வாயிலாக மாணவர்களுக்கு தொழில்துறை தொடர்பான, அதற்குத் தேவையான தொழில்நுட்ப திறன்கள், தனிப்பட்ட திறன்கள், நிறுவன திறன்கள் ஆகியவற்றில் திறன் பயிற்சிகள் கிடைக்கும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற கல்வித்துறைநிறுவனங்களுடன் இணைந்து ஆங்கில மொழித் திறன் வழங்கப்படும்.

நான் முதல்வன் திட்டம் தொடங்கப்பட்ட 2022 ஆம் ஆண்டு முதல் கடந்த மூன்று ஆண்டுகளில் (2022-23, 2023-24, 2024-25) வேலூர் மாவட்டத்தில் 4 பொறியியல் கல்லூரிகளில் 11.112 மாணாக்ர்களும். 8 கலை மற்றும்அறிவியல்கல்லூரிகளில் 42,788 மாணாக்கர்களும். 19 பல்தொழில்நுட்பக் கல்லூரிகளில் 9,839 மாணாக்கர்களும் என மொத்தம் 63,739 மாணாக்கர்களுக்கு பல்வேறு திறன் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளது.

பொறியியல் கல்லூரிகளில் நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக 2,388 இறுதி ஆண்டு மாணாக்கர்களுக்கு சீமென்ஸ். டசால்ட், மைக்ரோசாப்ட், ஐ.பி.எம். சிஸ்கோ, ஆட்டோ டெஸ்க் போன்ற பன்னாட்டு நிறுவனங்கள் மூலமாகவும். எல்.என்.டி. டி.சி.எஸ். இன்போசிஸ், என்.எஸ்.இ போன்ற புகழ்பெற்ற உள்நாட்டு நிறுவனங்கள் மூலமாகவும் திறன் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளது. இதன் மூலமாக வேலூர் மாவட்டத்தில் பொறியியல் படிப்புகளில் பயின்ற 867 மாணாக்கர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக 16,567 இறுதி ஆண்டு மாணாக்கர்களுக்கு முன்னணி நிறுவனங்களின் பயிற்றுநர் மற்றும் பாடங்களுடன் திறன் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளது. இதன் மூலமாக வேலூர் மாவட்டத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயின்ற 652 மாணாக்கர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கப்பெற்றுள்ளது.

மேலும் பல் தொழில்நுட்பக் கல்லூரிகளில் நான் முதல்வன் திட்டத்தின் மூலமாக 2,859 இறுதி ஆண்டு மாணாக்கர்களுக்கு முன்னணி நிறுவனங்களின் பயிற்றுநர் மற்றும் பாடங்களுடன் திறன் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டுள்ளது. இதன் மூலமாக வேலூர் மாவட்டத்தில் பல் தொழில்நுட்பக் கல்லூரிகளில் பயின்ற 404 மாணாக்கர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. வேலூர் மாவட்டத்தில் கடந்த மூன்றாண்டுகளில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் பொறியியல் கல்லூரிகள், கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள், பல் தொழில் நுட்பக் கல்லூரிகளில் பயின்ற 63,739 மாணவ மாணவியர்கள் திறன் மேம்பாட்டு பயிற்சிகளை பெற்று பயனடைந்துள்ளனர். இவர்களில் இறுதி ஆண்டு பயிலும் 21.814 மாணக்கர்களில் 1,923 மாணாக்கர்கள் வேலை வாய்ப்பினை பெற்றுள்ளனர் என மாவட்ட ஆட்சியர் வே.இரா சுப்புலெட்சுமி. தெரிவித்துள்ளார்.

நான் முதல்வன் திட்டத்தில் திறன் பயிற்சிகளை பெற்று வேலைவாய்ப்பினை பெற்றுள்ள மாணவ, மாணவிகள் தெரிவித்ததாவது,

குடியாத்தம் திருமகள் ஆலை அரசு கல்லூரியில் BCA 3 ஆம் ஆண்டு படிக்கும் மாணவி லோஷனிதெரிவித்ததாவது. என்னுடைய பெயர் லோஷனி. நான் காட்பாடியில் இருந்து வருகிறேன். காட்பாடி அருகில் உள்ள ஜங்காலப்பள்ளி அரசு பள்ளியில் பன்னிரண்டாம் வகுப்பு வரை படித்தேன். நான் 12 ஆம் வகுப்பிற்கு பிறகு குடியாத்தம் திருமகள் ஆலை அரசு கல்லூரியில் BCA படித்து வருகிறேன். இப்பொழுது நான் இறுதி ஆண்டு படிக்கிறேன்.



ஒவ்வொரு தேர்விலும் நான் 90 சதவீதத்திற்கும் அதிகமான மதிப்பெண்களை பெற்று வருகிறேன். இந்த நிலையில் எனக்கு வேலைவாய்ப்பில் பயிற்சி அளிக்கக் கூடிய வகையில் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டது. இந்த திட்டத்தின் மூலமாக எனக்கு Google Cloud, Python பயிற்சிகள் அளிக்கப்பட்டது. இந்த பயிற்சி முடித்த பிறகு எங்களுடைய கல்லூரியில் நான் முதல்வன் திட்டத்தின் மூலமாகவேலைவாய்ப்பிற்கான நேர்காணல் நடைபெற்றது. இந்த நேர்காணலில் நான் மூன்று முக்கியமான கம்பெனிகளில் தேர்வானேன். அதில் ஒன்று Zebronics. மற்றொன்று Festo. மூன்றாவதாக ஒரு AI தொழில்நுட்ப நிறுவனத்தில் தேர்வானேன். இந்தத் திறன் பயிற்சிகளில் திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்திய எங்கள் கல்லூரியில் இருந்து இரண்டு நபர்களை தேர்வு செய்து சென்னைக்கு பயிற்சிக்கு அனுப்பினார்கள். அதில் நானும் ஒருவர். இந்த பயிற்சிக்கு செல்ல வேண்டிய சூழ்நிலையில் எனக்கு செமஸ்டர் தேர்வுகள் இருந்ததால் பயிற்சியில் கலந்து கொள்ள முடியாத சூழ்நிலை இருந்தது. இதுகுறித்து நான் முதல்வன் திட்ட அலுவலர்களுடன் தெரிவித்த பொழுது, அதற்கும் அவர்களே எனக்கு ஒரு தீர்வை வழங்கினார்கள். இங்கிருந்தபடியே ஆன்லைன் மூலமாக வகுப்புகளில் பங்கேற்க வழிவகை செய்து கொடுத்தார்கள். இப்பொழுது அந்த வகுப்புகளிலும் நான் கலந்து கொண்டு சிறப்பாக என்னுடைய திறன்களை வளர்த்து வருகிறேன். இந்த பயிற்சி வகுப்புகளில் ஒரு மிடில் கிளாஸ் குடும்பமாக இருக்கும் ஒரு நபர் நல்ல வேலை வாய்ப்பு மூலமாக எவ்வாறு தன்னுடைய வாழ்க்கை முறையைஹை கிளாஸ் குடும்ப வாழ்க்கை முறையாக மாற்றிக் கொள்வது என்பது குறித்து சிறப்பாக எடுத்துரைத்தார்கள். இந்த பயிற்சிகள் முடிந்த பிறகு செமஸ்டர் தேர்வுகள் முடிந்த பிறகு நான் ஏதேனும் ஒரு நல்ல நிறுவனத்தில் நல்ல சம்பளத்திற்கு வேலைக்கு சென்று விடுவேன். நான் முதல்வன் திட்த்தின் வாயிலாக திறன் பயிற்சி பெற்று வேலை வாய்ப்பினை பெற்றுள்ளதால் என்னுடைய மனம்நிறைந்துள்ளது. இத்திட்டத்தை கொண்டு வந்து அரசு கல்லூரிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு திறன் பயிற்சிகளை வழங்கி நல்லதொரு வேலைவாய்ப்பினை வழங்க ஏற்பாடு செய்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

IT @ Btech (Naval architech & Ocean Engg) 5 காட்பாடி பகுதியை சார்ந்த மாணவன் தினேஷ் குமார்தெரிவித்ததாவது.

என்னுடைய பெயர் தினேஷ்குமார். நான் காட்பாடி காங்கேயநல்லூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 10 ஆம் வகுப்பு படித்து வந்தேன். என்னுடைய தந்தையின் பெயர் பாபு. அவர் காட்பாடி ரயில் நிலையத்தில் மூட்டை தூக்கும் தொழிலாளியாக பணியாற்றி வந்தார். 6 மாதத்திற்கு முன்பாக என்னுடைய தந்தைக்கு திடீரென Heart attack வந்து அவருக்கு open heart surgery செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது அவரால் வேலைக்கு செல்ல முடியவில்லை. என்னுடைய அம்மா பீடி சுற்றும் தொழில் செய்து என்னை படிக்க வைத்து வருகிறார். இந்த நிலையில் எனக்கு தமிழ்நாடு



அரசின் வேலூர் மாவட்ட மாதிரி பள்ளியில் பயில்வதற்கு வாய்ப்பு கிடைத்தது. மாதிரி பள்ளிக்கு செல்வதற்கு முன்பாக எனக்கு JEE, IIT, NIT இதைப்பற்றி எதுவுமே தெரியாது. மாதிரி பள்ளியில் உயர்கல்வி படிப்பதற்கு நான் முதல்வன் திட்டத்தின்கீழ் சில வழிகாட்டிகள் வழங்கப்பட்டது. அப்பொழுதுதான் எனக்கு JEE mains exam பற்றி தெரிந்து கொண்டு ஜனவரி மற்றும் ஏப்ரல் மாதத்தில் எழுதி தேர்வானேன். பிறகு JEE Advance exam எழுதுவதற்காக என்னை தேர்வு செய்து சென்னை சைதாப்பேட்டையில் உள்ள அரசு மாதிரி பள்ளியில் 30 நாட்கள் தங்க வைத்து எனக்கு அங்கே பயிற்சி வழங்கப்பட்டது. JEE advance exam தேர்விலும் நான் வெற்றி பெற்று IIT சென்னையில் எனக்கு Btech Naval architech & Ocean Engg படிப்பதற்கு வாய்ப்பு கிடைத்தது. 10 ஆம் வகுப்பு பயிலும் வரை JEE, IIT இதைப்பற்றி எதுவுமே தெரியாமல் இருந்த எனக்கு இது குறித்து நான் முதல்வன் திட்டத்தில் தெரியப்படுத்தி, பயிற்சிகளையும் வழங்கி IITல் படிப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றால் அதற்கு முழுமுதற் காரணம் தமிழ்நாடு அரசு செயல்படுத்தியுள்ள நான் முதல்வன்திட்டம். இத்திட்டத்தின் மூலம் IIT சென்னையில் தேர்வாகியுள்ளதால் என்னுடைய பெற்றோர்கள் மற்றும் என்னுடைய மனமும் நிறைந்துள்ளது. இத்திட்டத்தை கொண்டுவந்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு என்னுடைய பெற்றோரின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**ராஜ பிரகாஷ்**
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
**நந்தகுமார்**
செய்தி மக்கள் தொடர்பு துணை அலுவலர்
வேலூர் மாவட்டம்




## சோசியலிஸ்ட் மக்கள் கட்சி என்ற பெயரில் புதிய கட்சி தொடங்குவதற்கான ஆலோசனைக் கூட்டம்

தேனி, ஜூன்.10-

தேனி மாவட்டம் போடிநாயக்கனூரில் மேல சொக்கநாதபுரம் கோகுல் கிரானைட்ஸ் மீட்டிங் வளாகத்தில் சோசிய லிஸ்ட் மக்கள் கட்சி என்ற பெயரில் புதிய கட்சி தொடங்குவதற்கான மற்றும் நிர்வாகிகள் தேர்வுக்கான கலந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி அமைத்து 234 தொகுதியில் போட்டியிடுவது குறித்தும் தேர்தல் ஆணையத்தில் உரிய முறையில் பதிவிடுவது குறித்தும் கலந்து ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. கோகுல் கிரானைட் உரிமையாளர் குமரேசன் மற்றும் ராம் தாஸ் தலைமை யிலும் மற்றும் சரவண குமார் நடை பெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் சரவணன், நாகப்பன், அருளனந்தன் ஒய்வு பெற்ற ஆடிட்டர் முத்துசாமி மற்றும் பிரபல தொழிலதிபர்கள் மருதமுத்து, திண்டுக்கல் சிவக்குமார், கரூர் தங்கவேல், விஸ்வ தமிழ் கழக நிர்வாகி சுடலை முத்து மற்றும் பல நிர்வாகிகள் இக்கூட்டத்தில் பங்கேற்றனர்.



## மஹா கும்பாபிஷேக விழா

மதுரை, ஜூன்.10-

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், நல்லமரம், கொட்டாணிபட்டி, ந.மீனாட்சிபுரம், ந.கோவிலூர், ந.முத்துலிங்காபுரத்தில் அருள்பாலித்து வரும் 700 ஆண்டுகள் பழமை வாய்ந்த அருள்மிகு ஸ்ரீ ருக்மணி, ஸ்ரீ சத்யபாமா சமேத ஸ்ரீ நவநீதகிருஷ்ணன் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு புனராவர்த்தன அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம் சீரும், சிறப்புமாக கிராம பொதுமக்கள் முன்னிலையில் நடைபெற்றது. ந.முத்துலிங்காபுரம் மற்றும் சுற்று வட்டார கிராம பொது மக்கள், சுற்று வட்டார கோயம்புத்தூர் வாழ் உறவினர்கள் மற்றும் டி.கல்லுப்பட்டி சுற்று வட்டார பக்தகோடிகள் அனைவரும் கலந்து கொண்டுகுடமுழுக்கு விழாவை சிறப்பித்தனர். இந்த குடமுழுக்கு திமுக மதுரை தெற்கு மாவட்ட செயலாளர் . மணிமாறன் பாரதி தம்பதிகள் கலந்து கொண்டனர். இந்த விழாவில் தொடர்ந்து மூன்று நாட்கள் சுமார் ஆறாயிரம் பக்தகோடிகளுக்கு மூன்று வேளையும் அன்னதான பிரபு, கொடை வள்ளல் டெல்லிவீரப்பட்டி வேம்படியான் ஜுவரத்தினம் வழங்கி விழாவிற்கு பேருதவி புரிந்தார். மேலும் மேற்படி குடமுழுக்கு விழாவில் பாரதியார் கல்வி நிறுவனங்கள் தாளாளர் பொன்.கருணாநிதி கலந்து கொண்டு சிறப்பித்தார். மேற்படி கும்பாபிஷேக விழா ஏற்பாடுகளை ந.முத்துலிங்காபுரம் கிராம பொதுமக்கள் மற்றும் விழா குழுவினர் செய்திருந்தனர்.

## ஆயக்குடி பேரூராட்சி அதிகாரிகளின் அலட்சியத்தால் தூய்மை பணியாளராக மாறி குப்பையை அள்ளிய பெண் விசிக கவுன்சிலரால் பரபரப்பு

திண்டுக்கல், ஜூன்.10-

திண்டுக்கல் மாவட்டம் பழனி அடுத்த ஆயக்குடி பேரூராட்சிக்கு உட்பட்ட 16 வது வார்டு பகுதியில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் கவுன்சிலர் சரஸ்வதி வாஞ்சிநாதன் மக்கள் பணி செய்து வருகிறார்.

இந்நிலையில் 16வது பகுதியில் பேரூராட்சி நிர்வாகத்தின் மூலம் கடந்த 20 நாட்களாக குப்பைகள் மற்றும் சாக்கடைகள் அள்ளப்படாமல் தேங்கி காணப்பட்டு வந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து கவுன்சிலர் சரஸ்வதி வாஞ்சிநாதன் பேரூராட்சி அதிகாரிகளிடம் என் வார்டில் தொற்றுநோய் பரவும் அபாயம் உள்ளதால் குப்பைகளை அகற்ற வேண்டும் சாக்கடைகளை தூர்வாரப்பட வேண்டும் என மனு செய்துள்ளார்.

தொடர்ந்து அதிகாரிகள் மனுவை குப்பையில் வீசி விட்டு அப்பகுதியில் குப்பையில் அள்ளாமல் காலம் தாழ்த்தி வந்துள்ளன.

இதனைத் தொடர்ந்து சரஸ்வதி வாஞ்சிநாதன் செயல் அலுவலரிடம் தொடர்பு கொண்ட பொழுது தான் விடுமுறையில் இருப்பதாகவும் தலைமை



எழுத்தர் சுசீலா என்பவர் தற்போது நிர்வாக பொறுப்பை கவனித்து வருவதாகவும் கூறியுள்ளார்.

தொடர்ந்து தங்கள் பகுதியில் உடனடியாக குப்பைகள் மற்றும் சாக்கடைகள் தூர்வாரப்பட வேண்டும் என வலியுறுத்தி நிலையில் அதிகாரியான சுசீலா உங்கள் பகுதியில் குப்பைகள் அல்ல முடியாது உங்களால் முடிந்ததை பார்த்துக்கொள்ளுங்கள் என்று அதிகார தோரணையில் பேசியதால் இருவரு க்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டன. மேலும் கவுன்சிலர் சரஸ்வதி வாஞ்சிநாதன் தங்கள் பகுதியுள்ள பெண்களை திரட்டி தாங்களாகவே குப்பைகளை அள்ளிய அவல நிலை ஏற்பட்டன. தொடர்ந்து குப்பைகள் அதிகரித்துள்ள நிலையில் குழந்தை முதல் பெரியவ ர்கள் வரை பல்வேறு நோய்கள் ஏற்பட்டு வருவதால் தாங்களாகவே குப்பைகளை சுத்தம் செய்தோம். மேலும் அலட்சியப் போக்குடன் காணப்பட்டு வரும் அதிகாரிகள் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறார்.



## பெருமுகையில் அரசால் கட்டப்படும் தங்கும் விடுதி கட்டுமான பணியை அமைச்சர் ஆய்வு

வேலூர், ஜூன்.10-

வேலூர் மாவட்டம், பெருமுகையில் 250 படுக்கை வசதி கொண்ட முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு தங்கும் விடுதி கட்டுமான பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, (06.06.2025) பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, முதன்மை தலைமை பொறியாளர் மணிவண்ணன், தலைமை பொறியாளர் மணிகண்டன், கண்காணிப்பு பொறியாளர் அருள், செயற்பொறியாளர் சுடலைமுத்து, உதவி செயற்பொறியாளர் படவேட்டான் துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



■ திருச்சி மாவட்டம் சோமரசம்பேட்டை பகுதியில் உள்ள வாசன் சிட்டி இளைஞர்கள் நடத்திய கபடி விளையாட்டு நிகழ்ச்சி நடைபெற்றது மேலும் கபடி விளையாட்டு நிகழ்ச்சிக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கிய சோமரசம்பேட்டை காவல் ஆய்வாளர் உயர் திரு. கதிரேசன் அவர்களுக்கும் உதவி ஆய்வாளர் திரு. பூபதி அவர்களுக்கும் மற்றும் சக காவலர்களுக்கும் கபடி விளையாட்டு கமிட்டி இளைஞர்கள் சார்பாகவும் மற்றும் கிராம பொதுமக்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.



# பீடா பிரியர்களுக்காக வட மாநிலங்களுக்கு செல்லும் சின்னமனூர் வெற்றிலை

சின்னமனூர், ஜூன்.10-

தேனி மாவட்டம் ஜெயமங்கலம், சின்னமனூர், வடுகபட்டி, சில்வார்பட்டி, மார்க்கையன்கோட்டை, வேம்பரளி உள்ளிட்ட பகுதிகளில் வெற்றிலை விவசாயம் அதிகளவில் நடைபெற்று வருகிறது. சக்கை, சைடுமார், இளங்கால், சைடு பறி, முதியால் உள்ளிட்ட பல்வேறு ரகங்கள் விளைவிக்கப்படுகின்றன. இந்த வெற்றிலை வகைகள் சின்னமனூர், பெரியகுளம், தேனி சந்தைகளுக்கு கொண்டு வரப்படுகின்றன.

அங்கு ரகம் வாரியாக பிரிக்கப்பட்டு அடுக்கப்படுகின்றன. இவற்றை வியாபாரிகள் கொள்முதல் செய்து பாண்டிச்சேரி, மதுரை, விழுப்புரம், கிருஷ்ணகிரி, கொல்கத்தா, பெங்களூரு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கு அனுப்புகின்றனர். சிங்கப்பூர் உள்ளிட்ட பல்வேறு வெளிநாடுகளுக்கும் அதிகளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இரும்புச் சத்து உள்ள இந்த வெற்றிலை செரிமானத்துக்கு உதவும் மருத்துவக் குணம் கொண்டது.

கடந்த தலைமுறையினருக்கு வெற்றிலை மெல்லும் பழக்கம் இயல்பாகவே இருந்தது. இதனால் நோய், நொடியின்றி வாழ்ந்தனர். ஆனால், காலபோக்கில் இப்பழக்கம் குறையத் தொடங்கியது. தேவை வெகுவாக குறைந்ததால் வெற்றிலை விவசாயத்தில் சரிவு ஏற்பட்டது. இதனால் தேனி மாவட்டத்தில் 100 ஏக்கர் பரப்பளவில் நடைபெற்ற இந்த விவசாயம் தற்போது 20 ஏக்கர் அளவுக்கு சுருங்கி விட்டது. இதனால் எந்த ரகத்துக்கு தேவை அதிகம் உள்ளதோ, அதை மட்டும் தேர்வு செய்து பயிரிட்டு வருகின்றனர். இருப்பினும் திருவிழா, விசேஷ நிகழ்ச்சிகள் போன்றவை வெற்றிலைக்கு வெகுவாக கைகொடுத்து வருகிறது.

**வெளிமாநிலங்களுக்கு அனுப்புவதற்காக**

பார்சல் செய்யப்படும் வெற்றிலை. மேலும் கொல்கத்தா உள்ளிட்ட வெளிமாநிலங்களில் பீடா பயன்பாடு அதிகம் உள்ளது. அதற்காக இங்கிருந்து அதிகளவில் வெற்றிலை அங்கு சந்தைப்படுத்தப்படுகிறது. இதற்காக சக்கை, திடமான மார் உள்ளிட்ட ரகங்கள் அதிகளவில் விளைவிக்கப்படுகின்றன. இவை திருச்சி, தருமபுரி, கரூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து வெளிமாநிலங்களுக்கு மொத்தமாக அனுப்பப்படுகின்றன.

வெற்றிலையின் நேரடிப் பயன்பாடு குறைந்ததால், இவற்றை மதிப்புக் கூட்டும் பொருளாக மாற்றி விற்பனை செய்வதற்கான முயற்சிகளும் நடைபெற்று வருகின்றன. இதற்காக வெற்றிலை ஜூஸ், வெற்றிலை சாக்லேட் உள்ளிட்ட பொருட்களை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் தொடங்கி உள்ளன.

**பழனிவேல்**

இது குறித்து சின்னமனூர் விவசாயி பழனிவேல் கூறுகையில், கம்பம் பள்ளத்தாக்கில் முன்பு ஆண்டு முழுவதும் வேளாண் பணிகள் நடக்கும். அப்போது ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இப்பணியில் ஈடுபடுவர். இவர்களுக்கு வெற்றிலை பழக்கம் இருந்ததால் இதன் விற்பனையும் அதிகம் இருக்கும். ஆனால், தற்போதைய நிலை மாறி விட்டது. பீடா போடும் பழக்கம் வெளிமாநிலத்தில் இருப்பதால் வெற்றிலைக்கு ஓரளவு விலை கிடைத்து வருகிறது என்று கூறினார்.

தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் சார்பில் இவற்றை மதிப்புக்கூட்டிய பொருட்களாக மாற்றி அதிகளவில் சந்தைப்படுத்த வேண்டும். அப்போதுதான் வெற்றிலையின் பாரம்பரியத்தை தக்கவைக்க முடியும்.

# நகர இளைஞரணி சார்பில்கலைஞர் 102 வது பிறந்தநாள் விழா... நகர் மன்ற தலைவர் பங்கேற்பு



தென்காசி, ஜூன்.10-

தென்காசி தெற்கு மாவட்டம் கடையநல்லூர் நகர திமுக இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மற்றும் டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது அதில் கடையநல்லூர் நகர் மன்ற தலைவர் முனைவர் மூப்பன் ஹபீபூர் ரகுமான் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு முகாமை துவக்கி வைத்தார் கடையநல்லூர் நகரம் முத்துகிருஷ்ணாபுரம் ரத்னா ஆங்கில பள்ளியில் வைத்து நகர திமுக இளைஞரணி துணை அமைப்பாளர்கள் சார்பில் கண் பரிசோதனை முகாம் நடைபெற்றது தெற்கு மாவட்ட திமுக பொறுப்பாளர் ஜெயபாலன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கிருஷ்ணராஜா ஆகியோர் சிறப்பு அழைப்பாளராகவும் கடையநல்லூர் நகர்மன்ற தலைவர் மூப்பன் ஹபீபூர் ரகுமான் நகர கழக. செயலாளர் அப்பாஸ் மாவட்ட மருத்துவ அணி தலைவர் மக்கள் மருத்துவர் சஞ்சீவி ஆகியோர் தலைமையில் நடைபெற்றது. இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் பிரகதீஸ் ராஜா சுகுமார் முகமது பைசல் பிரகாஷ் மதன் ஆகியோர் முன்னிலை வைத்தனர் ரத்னா கல்வி குழும தலைவர் ராமசுப்பிரமணியன் என்ற பிரகாஷ் வரவேற்புரை ஆற்றினார் முகாமில் கண் புரை நோய் உள்ளவர்கள் கலந்து கொண்டு அறுவை சிகிச்சை நவீன முறையில் நடைபெற தேர்வு செய்யப்பட்டனர் கண்புரை நோய் உள்ளவர்களுக்கு கண் விழி திரையில் முன் அறிகுறி இல்லாமலேயே பார்வை இழப்பு ஏற்பட வாய்ப்புள்ளவர்கள் உண்டு முகாமில் விழி திரை யும் பரிசோதனை செய்தார்கள் 40 வயதிற்கு மேல் எந்தவித அறிகுறியும் இல்லாமல் கண் பார்வை பாதிக்க வாய்ப்பு இருப்பதால் கண்ணீர் அழுத்தத்தை பரிசோதனை செய்து கொள்ளவும் நிகழ்ச்சி ஏற்பாட்டார்கள் தெரிவித்தனர் தலைமை தாங்கிய கடையநல்லூர் நகர மன்ற தலைவர் அவர்கள் கண்ணொளித் திட்டம் தந்த கலைஞர் என முன்னாள் முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கு புகழாரம் சூட்டினார். டாக்டர் கலைஞர் கருணாநிதி கொண்டு வந்த கண்ணொளிதிட்டம் 1972 ஆண்டு கண்ணொளி வழங்கும் திட்ட வரைவை சட்டசபையில் முன் வைத்து அதற்கான Blue print ஐ ரிலீஸ் பண்னுகிறார் கலைஞர்.

அப்போது தமிழ்நாட்டில் எக்கச்சக்கமான மக்களுக்கு மாலை கண் நோய்.. வைட்டமின் ஏ குறைபாட்டால் வருவது. ஆகும் ஐம்பது வயசு தாண்டிய நிறைய பேருக்கு கண்புரை நோயால் பாதிக்க பட்டிருக்கார்கள்

கண்புரைநோய்குறித்து ஒரு ஆய்வில் கண்புரை கண்புரை நோயால் பார்வை பறிபோன பிறகு மக்கள் வேலை இல்லாம நிறைய பேரு உணவில்லாம இறந்து போகிறார்கள் உணவு பற்றாக்குறையின் அடிப்படையில்.. இதே அவங்களுக்கு கண்புரை ஆபரேஷன் பண்ணி பார்வையை திருப்பி கொடுத்தால் அவர்கள் மேலும் கூடுதல் பத்து வருஷமாவது வேலை பார்த்து தங்கள் குடும்பத்தை பார்த்து கொள்ள கூடிய வாய்ப்பு அதிகமாகிறது என்று ஆய்வு சொல்றது .

இதன் அடிப்படையில இந்த திட்டத்தை அறிமுக படுத்தினார் தலைவர் கலைஞர். அவர்கள் ஏழை எளிய மக்களின் பெயர்தொடைக்க 50 ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் பணியை திராவிட முன்னேற்றக் கழகம் செய்து வருகிறது அதன் தொடர்ச்சியாக தான் தமிழக முதல்வர் தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எல்லோருக்கும் எல்லாம் என்ற கொள்கையோடு மக்களுக்கான திட்டங்களை நிறைவேற்றி வருகிறார் அடுத்த ஆண்டு நடைபெற உள்ள தமிழக சட்டமன்ற தேர்தலில் தொடர்ந்து மக்களுக்கான திட்டங்கள் சீரோடும் சிறப்புடன் நடைபெற திமுக கழகத்திற்கு வாக்களியுங்கள் என கேட்டுக்கொண்டு முகாமில் பேசினார் இளைஞர் அணி துணை அமைப்பாளர் கிருஷ்ணாபுரம் பிரகதீஸ் ராஜா நன்றி கூறினார்

# நுகர்வோர் பாதுகாப்பு கவுன்சிலுக்கு 23 பேர் கொண்ட புதிய குழு அமைப்பு

**சென்னை, ஜூன்.10–**

உணவுத்துறை அமைச்சர் தலைமையிலான மாநில நுகர்வோர் பாதுகாப்பு கவுன்சிலை சீரமைத்து 23 உறுப்பினர்களுடனான புதிய பட்டியலை தமிழக அரசு வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து தமிழக அரசிதழில் உணவுத்துறை செயலர் சத்யபிரத சாஹூ வெளியிட்டுள்ள அறிவிக்கையில் கூறியிருப்பதாவது: உணவுத்துறை அமைச்சர் தலைமையிலான இந்த கவுன்சிலில், வேலூர் எம்.பி. கதிர்ஆனந்த், தஞ்சாவூர் எம்.பி., எஸ்.முரசொலி, தாம்பரம் எம்எல்ஏ எஸ்.ஆர்.ராஜா, விக்கிரவாண்டி எம்எல்ஏ அன்னியூர் சிவா, உணவுப் பொருள் வழங்கல் ஆணையர், மாநில நுகர்வோர் குறைதீர் ஆணைய பதிவாளர், தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக்கழக தலைவர், இந்தியன் ஆயில் நிறுவன மாநில ஒருங்கிணைப்பாளர், மாநில அளவிலான வங்கியாளர் குழுவின் உதவி பொதுமேலாளர், பிஜஎஸ் தென் மண்டல துணை இயக்குநர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் தவிர தமிழ்நாடு உணவு பாதுகாப்பு ஆணையர், ஈரோடு நுகர்வோர் பாதுகாப்பு மைய தலைவர், கன்னியாகுமரி மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு சங்க தலைவர், சென்னை அம்பத்தூர் இந்திய நுகர்வோர் விழிப்புணர்வு சங்க தலைவர், ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் உள்ள நுகர்வோர் ஆராய்ச்சி கல்வி அமைப்பின் தலைவர், விழுப்புரம் மாவட்டம் நுகர்வோர் பாதுகாப்பு நலச்சங்க தலைவர், காவிரி டெல்டா விவசாயிகள் குழுவின் வி.சத்திய நாராயணன், மெட்ராஸ் சேம்பர் ஆப் காமர்ஸ் தலைவர், தமிழ்நாடு ஓட்டல்கள் சங்க தலைவர், சிஐஜி அமைப்பின் தலைவர், எத்திராஜ் மகளிர் கல்லூரியின் முதல்வர் ஆகியோர் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். உணவுத்துறையின் செயலர் உறுப்பினர் செயலராக இருப்பார். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மாலை தந்தி நாளிதழுக்கு**

விருதுநகர், திருநெல்வேலி தென்காசி, கரூர், சேலம், கோவை நாமக்கல், திருச்சிராப்பள்ளி, நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி தர்மபுரி, திருப்பத்தூர், கடலூர் ராணிப்பேட்டை ஆகிய மாவட்டங்களுக்கு மாவட்ட செய்தியாளர்கள் மாவட்ட புகைப்பட கலைஞர்கள் தாலுகா செய்தியாளர்கள் தேவை.

95 85 32 31 32, 944 35 71719



# மதுரை பேரையூர் குருவப்பநாயக்கன்பட்டி ஸ்ரீ வரதராஜ பெருமாள் திருக்கோவில் மகா கும்பாபிஷேக விழா

மதுரை. ஜுன்.10

மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம்,குருவப்பநாயக்கன்பட்டியில் அமைந்திருக்கும் நல்லபுலி வம்சத்திற்குப் பாத்தியப்பட்ட ஸ்ரீதேவி பூதேவி ஸமேத ஸ்ரீ வரதராஜ பெருமாள் மற்றும் ஸ்ரீ ரங்கம்மாள், ஸ்ரீ சிங்காரி அம்மாள் திருக்கோவிலில் முதல் நாள் நிகழ்ச்சியாக இராமநாதபுரம் ஸ்ரீ அம்மன் பெரிய கிணற்றிலிருந்து தீர்த்தம் கொண்டு வந்து கோவிலைஅடைந்து மஹாதீபாராதனை தொடர்ந்து கணபதி ஹோமத்துடன் இரண்டாம் நாள் நிகழ்ச்சியாக திருவிளக்கு பூஜை மூன்றாம் நிகழ்ச்சியாக பரிவார தெய்வங்களுக்கு திருமஞ்சனம் சாற்றி ஆச்சாரியார்கள் வேதங்கள் முழங்க மங்கள வாத்தியங்களுடன் கடம் புறப்பாடாகி கலசங்கள் மீது புனித நீர் தெளிக்கப்பட்டு மகா கும்பாபிஷேக விழா சிறப்பாக நடைபெற்றது. பின்னர் சிறப்பு அபிஷேக தீபராதணையுடன் பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டதுடன் மாபெரும் அன்னதானத்தில் ஏராளமானோர் கலந்துகொண்டனர். இவ்விழாவிற்கு சுந்தர்ராஜ், பாண்டியன்,மோகன், வெங்கிடசாமி மற்றும் பங்காளிகள் ஏற்பாடுகளை சிறப்பாக செய்திருந்தனர்.

# வைகாசி விசாகத் திருவிழா திருச்செந்தூரில் லட்சக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம்

தூத்துக்குடி, ஜூன்.10-

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் வைகாசி விசாகத் திருவிழா இன்று நடைபெறுகிறது. இதனை முன்னிட்டு லட்சக்கண க்காண பக்தர்கள் கடலில் புனித நீராடி, சுவாமி தரிசனம் செய்து வருகின் றனர். தமிழ் கடவுள் முருகப்பெருமானின் ஜென்ம நட்சத்திரமான வைகாசி விசாக நட்சத்திர தினம், வைகாசி விசாக பெருந்திருவிழாவாக கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டுக்கான வைகாசி விசாகத் திருவிழா நேற்று (ஜூன் 9) நடைபெற்றது. இதனை முன்னிட்டு திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் இன்று அதிகாலை 1 மணிக்கு நடை திறக்கப்பட்டு, 1.30 மணிக்கு விஸ்வரூப தீபாராதனை, 6 மணிக்கு உதய மார்த்தாண்ட அபிஷேகம், அதனைத் தொடர்ந்து மற்ற கால பூஜைகள் நடைபெற்றன.

மாலை 4 மணிக்கு மூலவருக்கு சாயரட்சை தீபாராதனை ஆனதும், சுவாமி ஜெயந்திநாதர் தங்க சப்பரத்தில் எழுந்தருளி வசந்த மண்டபம் வந்து சேர்கிறார். அங்கு முனிகுமார்களுக்கு சாபவிமோசனம் அளிக்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இரவு 7.15 மணிக்கு ராக்கால அபிஷேகம் நடைபெற்றது.



# முருகன் கோயில்களில் வைகாசி விசாகம் கோலாகலம்.. பக்தர்கள் வெள்ளத்தில் மிதக்கும் திருச்செந்தூர்

**தூத்துக்குடி, ஜூன்.10–**

வைகாசி விசாகத்தையொட்டி முருகன் கோயில்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகிறது. தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரில் உள்ள சுப்பி ரமணிய சுவாமி கோயில் முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடாகும். இங்கு தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். இக்கோயிலில், இன்று வைகாசி விசாக திருவிழா கோலாகலமாக கொண்டாடப்பட்டு வருகிறது. முருகன் பிறந்த விசாக நட்சத்திரத்தில் வைகாசி விசாகம் கொண்டாடப்படுவதாக நம்பப்படுகிறது.

இத்திருவிழாவை ஒட்டி திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோயிலில் நள்ளிரவு 1 மணியளவில் நடை திறக்கப் பட்டது. இத்திருவிழாவை முன்னிட்டு தென்காசி, ராமநாதபுரம், கன்னியாகுமரி, திருநெல்வேலி, உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து பக்தர்கள் பாதயாத்திரையாக வந்தனர். பாதயாத்திரையாக வந்த பக்தர்கள் அலகுவேல் குத்தியும், காவடி சுமந்தும் நேர்த்தி கடன்களை செலுத்தினர். மேலும், அவர்கள் கடலில் புனித நீராடி நீண்ட வரிசையில் காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர். வைகாசி விசாக திருவிழாவை ஒட்டி லட்சக்கணக்கான பக்தர்கள் கோயிலில் குவிந்துள்ளனர். இதனால், திருசெந்தூரில் திருவிழா களைகட்டியுள்ளது.

அதேபோல் சென்னை வடபழனியில் பக்தர்கள் வரிசையில் காத்திருந்து முருக பெருமானை வழிபட்டனர். இன்றைய தினம் வைகாசி விசாகம் முருகனின் பிறந்தநாளாக கொண்டாடப்பட்டு வருகிறது. இதன் காரணமாக ஒவ்வொரு முருகன் கோயில்களிலும் ஏராளமான பக்தர்கள் நீண்ட வரிசையில் காலை முதலே காத்திருந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். குறிப்பாக வேண்டுதல்களை நிறைவேற்றி வருகின்றனர். வைகாசி விசாக திருவிழாவை ஒட்டி நூற்றுக்கணக்கான பக்தர்கள் கோயிலில் குவிந்துள்ளனர். இதனால், வடபழனி முருகன் கோயிலில் காவல்துறை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

# 2.49 லட்சம் மாணவர்கள் விண்ணப்பம்: பொறியியல் படிப்புக்கு ஜூன் 27ல் தரவரிசை பட்டியல்

**சென்னை, ஜூன்.10–**

பொறியியல் படிப்புக்கு 2.49 லட்சம் மாணவர்கள் விண்ணபித்துள்ளனர். சான்றிதழ்களை பதிவேற்றம் செய்வதற்கான காலக்கெடு இன்று முடிவடைகிறது. தரவரிசை பட்டியல் ஜூன் 27ம் தேதி வெளியிடப்படுகிறது.

தமிழகத்தில் 440க்கும் மேற்பட்ட பொறியியல் கல்லூரிகள் உள்ளன. இக்கல்லூரிகளில் பிஇ, பிடெக் படிப்புகளில் ஏறத்தாழ 2 லட்சம் இடங்கள் அரசு ஒதுக்கீட்டு இடங்கள் ஆகும். இந்த இடங்களில் நடப்பு கல்வியாண்டில் சேருவதற்கான ஆன்லைன் விண்ணப்பப் பதிவு மே 7 தேதி தொடங்கி ஜூன் 6ம் தேதி (வெள்ளிக்கிழமை) முடிவடைந்தது.



மொத்தம் 3 லட்சத்து 2 ஆயிரத்து 374 பேர் விண்ணப்பம் பதிவுசெய்துள்ளனர். அவர்களில் 2 லட்சத்து 49 ஆயிரத்து 883 பேர் மட்டுமே விண்ணப்ப கட்ட ணத்தை செலுத்தியுள்ளனர். விண்ணப்பக் கட்டணம் செலுத்தியவர்களின் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். கடைசி நாள் நிலவரப்படி, விண்ணப்பக் கட்டணத்தை செலுத்திய மாணவர்களில் 2 லட்சத்து 26 ஆயிரத்து 359 பேர் தேவையான சான்றிதழ்களை பதிவேற்றம் செய்துள்ளனர்.

ஆன்லைனில் விண்ணப்பித்த மாணவர்கள் சான்றிதழ்களை பதிவேற்றம் செய்வதற்கான காலக்கெடு இன்றுடன் (9ம் தேதி) முடிவடைகிறது. எனவே, மாணவர்கள் இன்று நள்ளிரவு வரை சான்றிதழ்களை பதிவேற்றம் செய்து விண்ணப்பப் பதிவை முழுமைசெய்யலாம்.

தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் ஏற்கெனவே அறிவித்தபடி, பொறியியல் படிப்புக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு ஜூன் 11ம் தேதி ஆன்லைனில் ரேண்டம் எண் ஒதுக்கீடு செய்யப்படும். அதைத்தொடர்ந்து, இணைய வழியிலான சான்றிதழ் சரிபார்ப்பு ஜூன் 20ம் தேதி வரை நடைபெறும். ஜூன் 27ம் தேதி தரவரிசை பட்டியல் வெளியிடப்படும். கலந்தாய்வு தொடங்கும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.



## வேலூர் பழைய அரசு மருத்துவமனை இடத்தில், புதிதாக ரூ.150 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அரசு சிறப்பு மருத்துவமனையை அமைச்சர் ஆய்வு

வேலூர், ஜூன்.10-
வேலூர் மாவட்டம், வேலூர் தாலுகா, வேலூர் அரசு பென்ட்லேண்ட் மருத்துவமனை வளாகத்தில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் பல்நோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை கட்டுமான பணிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, (06.06.2025) அன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின் போது மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, சட்டமன்ற உறுப்பினர்கள் நந்தகுமார், கார்த்திகேயன், வில்வநாதன், மற்றும் மக்கள் பிரதிநிதிகள், முதன்மை தலைமை பொறியாளர் மணிவண்ணன், தலைமை பொறியாளர் மணிகண்டன், கண்காணிப்பு பொறியாளர் அருள், செயற்பொறியாளர் சுடலைமுத்து, உதவி செயற்பொறியாளர் படவேட்டான், அரசு துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.



## திருச்சிராப்பள்ளியில் கஞ்சா விற்பனை செய்த 5 பெண்கள் கைது :7 கிலோ கஞ்சா பறிமுதல்

■ திருச்சி, ஜூன்.10-
திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கஞ்சா மற்றும் போதை பொருள் தடுக்கும் வகையில் திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செ. செல்வநாகரெத்தினத்தின் உத்தரவின்பேரில், மாவட்ட மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு துணை கண்காணிப்பாளர் ஜெயசீலன் மேற்பார்வையில் துறையூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு ஆய்வாளர் கதிரவன் தலைமையிலான காவல்துறையினர், ராம்ஜி நகர், சோமரசம்பேட்டையில் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது, கஞ்சா வைத்திருந்த ராம்ஜி நகர் மலைப்பட்டியைச் சேர்ந்த ச. பாக்கியலெட்சுமி (29), செ. நளினி (50), க. கிருஷ்ணவேணி (61), லெ. ரேவதி (60), ராம்ஜி நகர் பா. லதா (53) ஆகியோரைப் பிடித்து, அவர்களிடமிருந்து 7 கிலோ கஞ்சாவைப் பறிமுதல் செய்தனர். தொடர்ந்து இதுகுறித்து திருவெறும்பூர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு காவல்துறையினர் வழக்குப் பதிந்து, மேற்கண்ட 5 பேரையும் கைது செய்தனர்.

கடந்த ஜனவரியில் திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளராக செ. செல்வநாகரெத்தினம் பதிவேற்றது முதல் இதுவரை 125 கஞ்சா வழக்குகள் பதியப்பட்டு, 81 கிலோ கஞ்சா மற்றும் போதை மாத்திரைகள் பறிமுதல் செய்யப்பட்டு, 180 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதில் 11 பேர் குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலும் 10 பேரை குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரசால் தடை செய்யப்பட்ட போதை பொருள்களை விற்பனை செய்தால் 89391 46100 என்ற திருச்சி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக உதவி எண்ணைத் தொடர்புகொண்டு தகவல் தெரிவிக்கலாம் என்று காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.



## புதிய சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு பூமி பூஜை

செங்கல்பட்டு, ஜூன்.10-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் தொகுதிக்கு உட்பட்ட புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியம் திருவஞ்சேரி முதல்நிலை ஊராட்சியில் புதிய சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு ஸ்ரீ பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு மற்றும் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து

1 கோடி ரூபாய் நிதியின் ஒதுக்கீடு செய்து சமுதாய நலக்கூடும் கட்டுவதற்கு கட்டுமான பணிக்கு தாம்பரம் மாநகர கழக செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியத்துக்கு உட்பட்ட திருவஞ்சேரி முதல் நிலை ஊராட்சியில் காமராஜர் தெரு பஜனை கோவில் தெரு பகுதியில் புதிய சமுதாய நலக்கூடம் அமைத்துத் தர பொதுமக்கள் கோரிக்கையை ஏற்று ஸ்ரீபெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மற்றும் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து முதல் கட்டமாக 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து புதிய சமுதாய நலக்கூடம் கட்டுவதற்கு பணிக்கான அடிக்கல் நாட்டு விழா திருவஞ்சேரி ஊராட்சி மன்ற தலைவர் ஜனனி சுரேஷ்பாபு. தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு அழைப்பாளராக தாம்பரம் மாநகர கழக செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா எம்.எல்.ஏ கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்.

உடன் திருவஞ்சேரி ஊராட்சி மன்ற துணைத் தலைவர் ருக்குமணி சக்தி. கிளைக் கழக செயலாளர் சக்தி, ஜே.பி.சுரேஷ்பாபு, வார்டு உறுப்பினர்கள் நாகலிங்கம், இமானுவேல் சூர்யா, பொன் வோல், செல்வி பாபுஜி, மகளிர் அணி, அரசு அதிகாரிகள், நல சங்கம் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

## வேலூர் மாவட்டம், அழகு என்றால் முருகன், முருகன் என்றால் அழகு இவை இரண்டையும் பிரிக்கமுடியாது. அப்படிப்பட்ட அழகனுக்கு சிலை அமைக்கப்பட்டுள்ளது



வேலூர், ஜூன்.10-
வேலூர் அடுத்த புதுவசூர் பகுதியில் உள்ள தீர்த்தகிரி சுப்பிரமணியர் திருக்கோவில் அறங்காவல் குழு சார்பில் சுமார் 500 அடி உயரம் கொண்ட தீர்த்தகிரி மலை குன்றின் மீது பீடத்துடன் சேர்த்து 92 அடி உயரத்தில் தற்போதைய சூழலில் உலகின் மூன்றாவது மிக உயரமான முருகன் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளது.

இச்சிலை அமைக்கும் பணிகள் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வந்த நிலையில், தற்போது முடிந்து வந்து வெகு விமரிசயாக 08062025 ஞாயிற்றுக்கிழமை அன்று கும்பாபிஷேகம் நடைபெற்றது.

அதற்கு முன்னதாக பல்வேறு நதிகளில் இருந்து புனித கொண்டுவரப்பட்டு யாகசாலை அமைக்கப்பட்டு, வேத மந்திரங்களை முழங்கி மேளதாளங்களுடன், புனித நீரை டிரோன் மூலமாக எடுத்துச் சென்று 92 அடி உயரமுள்ள முருகர் மீது ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டனர்.

இந்த விழாவில் வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை தமிழகம் மற்றும் புதுச்சேரி, பிற மாநிலங்கள், பிற மாவட்டங்களிலிருந்தும் அருகே உள்ள ஆந்திரா, கர்நாடகா, மாநிலங்களில் இருந்தும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் வந்திருந்து உலகின் மூன்றாவது சிலை என கருதப்படும் முருகனை

அரோகரா.. அரோகரா... என கோஷமிட்டு பக்தி பரவசத்துடன் வழிபாடு செய்தனர். இந்த திருக்கோவிலானது உலக அளவில் தீர்த்தகிரி மலை முருகன் 92 அடி மூன்றாவது இடமும், இரண்டாவதாக சேலம் 111 அடி, முதலிடமாக மலேசியாவில் 140 அடியில் இருப்பது குறிப்பிடத்தக்கது. இரண்டாவது இடமான வேலூர், தீர்த்தகிரி மலையில் அழகென்ற சொல்லுக்கு முருகா என்ற வடிவில் வடிவேலன் கார்த்திகேயன் என்ற பல்வேறு பெயர்கள் அமைந்த இந்த முருகனுக்கு பிரம்மாண்டமான முறையில் கும்பாபிஷேகம், குடமுழுக்கு விழா மற்றும் பல்வேறு சிறப்பு பூஜைகள் கோலாகலமாக நடைபெற்றது. இந்த விழாவில் சுமார் 5000க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

இந்தக் கும்பாபிஷேகம் விழாவில் எந்தவிதமான அசம்பாவிதம் ஏற்படாமல் இருப்பதற்கு பாதுகாப்பு ஏற்பாடுகள், வேலூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் மதிவாணன, டிஎஸ்பி பிரித்திவிராஜ் ஆகியோர் தலைமையில், காவல் ஆய்வாளர்கள் ராஜ சுலோச்சனா, சீனிவாசன், காண்டீபன், நாகராஜன் சுப்பிரமணி, போக்குவரத்து காவல் ஆய்வாளர்கள் கன்னியப்பன் ரஜினி, காவலர்கள் பணியாளர்கள் 250 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். இரண்டு நாட்களுக்கும் மேலாக பாதுகாப்பு பணிகள் மேற்கொண்டு போதிய பாதுகாப்பு கட்டமைப்பை தீயணைப்பு துறை மாவட்ட அலுவலர் பழனி, நிலைய அலுவலர் முருகேசன், நிலைய பணியாளர்கள் சரவணன், காரல்மார்க்ஸ் மற்றும் தீயணைப்பு குழு பணியாளர்கள் உட்பட பலர் ஈடுபட்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தனர். இதனைத் தொடர்ந்து மருத்துவம் மற்றும் நல வாழ்வு துறை ஊசூர் ஆரம்ப சுகாதார நிலைய தலைமை மருத்துவர் கார்த்திகேயன், ரம்யா, மருத்துவ துறை அலுவலர்கள் ஜெய் இந்தியா தேவி, செவிலியர்கள் சுமதி, உமாதேவி, பொன்னி லேப், சக்தி, சரண், முத்து, பாலாஜி, பெருமாள், கார்த்தி, சசிகுமார், ரமேஷ், ஆகியோர் கலந்து கொண்டு இந்த மருத்துவ முகாமை சிறப்பித்தனர். மதிய வேளையில் சுமார் 2 மணிக்கு மேல் பலத்த சூறைக்காற்றுடன் பலத்த மழை பெய்தது. இந்த மழையில் சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் மழைக்கு சிக்கி இந்த சன்னிதானத்தில் நின்று இருந்தனர் அப்போது பலத்த சூறைக் காற்றுளுடன் பந்தல் போட்டிருக்கும் இரும்பு தகடு சீட்டுகளையும் காற்றில் பறந்து உயிர் சேதம் ஏற்படும் வகையில் வீச தொடங் கியது. சில மணித்துளிகள் பெரும் பரபரப்பு நிலவியது பல்வேறு இடங்களில் இருசக்கர வாகனங்கள் கீழே விழுந்த முடியும், பேனர்கள் கிழிந்தபடியும் பேனர்கள் காட்டில் பரந்தபடியும் விளக்குகள் கீழே விழுந்து உடைந்த படியும் வழி முழுவதும் மிகுந்த சேதம் அடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது..



## சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் வைகாசி விசாக விழா

தேனி, ஜூன்.10-
தேனி மாவட்டம் போடி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோவிலில் இன்று வைகாசி விசாக விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.சுப்பிரமணிய சுவாமிக்கு பல்வேறு அபிஷேக ஆராதனைகள் நடத்தப்பட்டு கடந்த பத்து நாட்களாக சிறப்பு யாக பூஜைகள் மற்றும் அபிஷேகங்கள் செய்யப்பட்டன. இந்நிகழ்ச்சிகள் அனைத்தும் பரம்பரை கோவில் அறங்காவலர் ஜி.ஙி.ஷி.ஷி.சி.ஷி.முத்துராஜ் மற்றும் செயல் அலுவலர் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் கலந்து கொண்ட பக்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் திருப்புகழ் சபை சார்பாக 105ஆம் ஆண்டு அன்னதான விழா தலைவர் கே கண்ணன் என்ற கிருஷ்ணராஜ் ,பொருளாளர் ஐயப்ப ராஜன் ஙிகிஙிலி ,செயலாளர் லட்சுமி காந்தன் , தொழிலதிபர் அங்குவேல், ஆசிரியர் சுரேஷ் ஆகியோர் தலைமையில் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.மேலும் கோவில் நிர்வாகத்தின் சார்பாகவும் சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது.



■ சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வட்டம் சூராணம் பகுதியில் கடந்த ஒரு மாதமாக சரிவர தண்ணீர் வரவில்லை என புகார் தெரிவித்து அப்பகுதியை சேர்ந்த 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் காலி குடங்களுடன் நேற்று வாகனங்களை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.தண்ணீர் பிரச்னைக்கு தீர்வு காண மாற்று வழி இல்லாததால் போராட்டத்தில் ஈடுபடும் மக்களிடம் பேச்சு வார்த்தை நடத்த சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகள் வருவதே இல்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

## வேலூர் காவல் கண்காணிப்பு துறை அலுவலகத்தில் எஸ்.ஐ.கவிதா (தற்போது பணி திருப்பத்தூர்) என்பவர் போலி பில்கள் தயாரித்து லட்சக்கணக்கில் மோசடி



வேலூர், ஜூன்.10-
வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரி, வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கீழ்தளத்தில் இயங்கி வரும் சமூக நீதி மற்றும் மனித உரிமை பிரிவில் (SJHR) தெருவில் பணிபுரிந்து வந்த சிறப்பு உதவி ஆய்வாளர் கவிதா. இவர் 1997 ம் ஆண்டு பணியில் சேர்ந்தார். கடந்த 20 வருடங்களுக்கு மேலாக மாவட்ட காவல் அலுவலகத்தில் பல பிரிவுகளில் மாறி மாறி வேலை பார்த்து வந்தவர், கடந்த மூன்று வருடங்களாக ஷியிபிஸி பிரிவில் நிலைய எழுத்தர் ஆக பணி புரிந்து வந்துள்ளார்.

சமூக நீதிப் பிரிவின் முக்கியமான வேலை எஸ்.சி எஸ்.டி. வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணத் தொகை மாவட்ட கலெக்டர் அலுவலகம் மூலமாக வாங்கிக் கொடுப்பது, பழங்குடியினர் சாதிச் சான்றிதழ் சரிபார்ப்பு பணி, பொதுமக்களுக்கு சமூக நீதி சம்பந்தமான விழிப்புணர்வு நடத்துவது பின்றவையாகும்.

சிறிய அளவில் விழிப்புணர்வு நடத்துவதற்கு சாமியான பந்தல், சேர், டீ காபி ஆகியவற்றை ஏற்பாடுகள் செய்வதற்கு அரசால் ஒரு கூட்டத்துக்கு 2500/ ரூபாய் வரையிலும் பெரிய அளவில் விழிப்புணர்வு முகாம் நடத்துவதற்கு (Mass Awareness ) அரசாங்கத்தால் 64,000/ ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது. விழிப்புணர்வு கூட்டம் நடத்தினோம் என போலி பில்கள் தயாரித்து அதை அரசுக்கு பரிந்துரை அனுப்பிக் கடந்த மூன்று வருடங்களில் 300 விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டதாக (300*2500=7,50,000) அரசாங்கத்தை ஏமாற்றி பணம் பெறப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அதேபோல் பெரிய விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டதாக (6*64000=384000) தொகை கையாடல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இதில் குறிப்பிடத்தக்க ஒன்று விழிப்புணர்வு கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் கலந்து கொள்ளாமலேயே கலந்துகொண்டதாகக் குறிப்பிட்டு போலி பில்கள் தயாரித்து அதை அரசுக்கு அனுப்பி அதற்கான தொகையையும் பெற்றுக் கையாடல் செய்துள்ளனர். மேலும் கவிதா மீது பல்வேறு குற்றச்சாட்டுகள், புகார்கள் கூட இதற்கு முன்பு வந்த பிறகும் கூட தொடர்ந்து அதே இடத்திலேயே பணி புரிந்து வந்துள்ளார். தற்போது இந்த விஷயம் வடக்கு மண்டல ஐஜி ஆஷ்ரா கர்க்கின் கவனத்திற்கு சென்றபின் அவரது அதிரடி உத்தரவால் தற்போது வேலூர் மாவட்டத்தில் இருந்து திருப்பத்தூர் மாவட்டத்திற்கு பணியிட மாறுதல் அளிக்கப்பட்டுள்ளது. அவர்மீது விசாரணை நடத்தவேண்டும் என வடக்கு மண்டல தலைவருக்கு புகார் அனுப்பிக்கொண்டு இருக்கின்றனர்.

இதுகுறித்து எஸ்.பி அலுவலக வட்டாரத்தில் விசாரித்தபோது, கடந்த 20 ஆண்டுகள் அவர் இங்கேயே பணியாற்றியது உண்மைதான். அதற்காக ஆண்டுக்கு 100 கூட்டங்கள் நடத்தியதாகவும் அதில் ஊழல் செய்ததாக சொல்வது எல்லாம் ஏற்புடையதாக இல்லை. அவர்கள் குறிப்பிடும் தொகை அதிகம். காரணம், அவ்வளவு தொகை எல்லாம் அந்த பிரிவுக்கு காவல்துறையில் வழங்குவது இல்லை. அப்படி நடந்திருந்தாலும் அதில் சம்மந்தப்பட்ட பிரிவின் உயர் அதிகாரிகளுக்கும் பங்கு இருக்கும் என்கிறார்கள்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161